**சார்பு நீதிமன்றம், திருவாரூர்**
முன்னிலை – **திரு. M.முருகன், M.L.,**
**சார்பு நீதிபதி, திருவாரூர்.**
2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09–ஆம் நாள், வியாழன் கிழமை
(திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், பங்குனித்திங்கள் 26–ஆம் நாள்)

**அ.வ.எண்.84/2018**
**(CNR.NO.TNTV03–000271–2018)**

திருவாரூர் வட்டம், திருவாரூர் நகரம், நாகை புறவழிச்சாலை K.T.R.எஸ்டேட், கதவிலக்கம்.58, என்ற முகவரியில் ஸ்ரீ சக்தி ஏஜென்சிஸ் என்ற பெயரில் தொழில் செய்து வரும் திருமலை மகன் 48 வயதுள்ள T.சரவணன்.

... வாதி.

– எதிர்–

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பேரளம், மேலத்தெரு, கதவிலக்கம்.42/24, என்ற முகவரியில் ஸ்ரீ மாருதி ஏஜென்சிஸ் என்ற பெயரில் தொழில் செய்து வரும் சுமார் 44 வயதுள்ள D.கைலாசம்.(தந்தை பெயர் வாதிக்கு தெரியவில்லை) ... பிரதிவாதி.

வாதிக்கு பிரதிவாதி தாவா தொகை ரூ.1,44,101/–ற்கு தாவா தாக்கலான தேதியிலிருந்து தொகை செல்லாகும் வரை 12% பின் வட்டியும் மற்றும் தாவா செலவுத்தொகையும் சேர்த்து வாதிக்கு செலுத்த பிரதிவாதிக்கு உத்தரவிட்டு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்க வேண்டி வாதியால் இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள்.25.06.2018, 23.07.2018
வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்.03.08.2018

வழக்குமூலம் 2017, 19.12.2017, 21.01.2018, 10.02.2018 ஆகிய தேதிகளில் திருவாரூர் மற்றும் பேரளத்தில் வழக்கு உற்பத்தி.

வழக்கு தொகையான ரூ.144101/–க்கு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 22–ன் படி நீதிமன்றக்கட்டணமாக ரூ.4324/– செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இறுதியாக கடந்த 13.02.2026–ம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.R.அய்யப்பன் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்றே இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1. இவ்வழக்கு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. வாதிக்கு பிரதிவாதி தாவா தொகையில் ரூ.1,20,233/-யும் தாவா அசல் தொகை ரூ.1,13,233/-க்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பு தேதியில் இருந்து வசூலாகும் தேதி வரை 6% வட்டியும் மற்றும் தாவா செலவுத்தொகையும் சேர்த்து பிரதிவாதி திரும்ப செலுத்த வேண்டும் என்றும் வாதியின் வழக்கை செலவுத்தொகையுடன் அனுமதித்தும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.
3. பிரதிவாதியின் எதிர்பாத்திய வழக்குரையை தள்ளுபடி செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பாணை வழங்குகிறது.
4. வாதி தரப்பு வழக்கு செலவுத் தொகையான ரூ.8660/-ஐ பிரதிவாதி, வாதிக்கு வழங்க வேண்டும்.

**<u>செலவுத் தொகை பட்டியல்</u>**

| **வாதி தரப்பு** | **Rs. P.** | **பிரதிவாதி தரப்பு** |
|---|---|---|
| வழக்குரையில் நீ.ம.க. | 4322.00 | செலவு பட்டியல் தாக்கல் இல்லை. |
| ஆவணங்களில் நீ.ம.க. | 50.00 | |
| வக்காலத்து | 10.00 | |
| படி மெமோ | 4.50 | |
| தட்டச்சுக்கூலி | 100.00 | |
| வழக்கறிஞர் ஊதியம் | 4173.00 | |
| **மொத்தம்** | **8659.50** | |
| **முழுமையாக்கப்பட்ட தொகை** | **8660.00** | |

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09-ஆம் நாளில் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிடப்பட்டு வழங்கப்பட்டது.

MURUGAN M Digitally signed by MURUGAN M Date: 2026.04.22 11:22:41 +0530

சார்பு நீதிபதி,
திருவாரூர்.